விலை சதம் 25

# ஈழநாடு

மலர்: 15 — The Eelanadu — இதழ்: 356
யாழ்ப்பாணம் — தை 22 — முஹர்ரம் 10 — திங்கட்கிழமை — 4-2-74

-4 FEB 1974

**'ஈழநாடு' சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி - வாரமலர் [உட்பட] | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 34-00 | ரூ. 6-00 |
| 6 மாதம் | ரூ 67-00 | ரூ. 12-00 |
| 1 வருடம் | ரூ 132-00 | ரூ. 23-00 |

[ஆள் மூலம் விநியோகம்]
(யாழ். மாநகரசபை எல்லைக்குள்)

| | தினசரி - வாரமலர் (உட்பட) | வாரமலர் [மட்டும்] |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 26-00 | ரூ 5-00 |
| 6 மாதம் | ரூ. 51-00 | ரூ 10-00 |
| 1 வருடம் | ரூ. 100-00 | ரூ. 18-00 |

# நெல் அரிசி ஆனையிறவு தடை முகாமில் பொலிஸ் சோதனை இல்லை!

## அரச உயர் அதிகாரிகள் 24 மணி நேரமும் கடமை

### காரியாதிகாரிகளின் 'பர்மிட்' அவசியம்

(யாழ்ப்பாணம், திங்கள்)

**ஆனையிறவுத் தடையைத் தாண்டி யாழ்ப்பாணத்திற்குள் கொண்டுவரப்படும் நெல்-அரிசி முதலியவற்றை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளில் உயர் அரசாங்க அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வித பரிசோதனைகளில் இனிமேல் பொலிசார் ஈடுபடமாட்டார்கள்.**

கடந்த சனிக்கிழமை முதல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் விமல் அமரசேகரா உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகேசம்பிள்ளை, யாழ் மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. டபிள்யூ. ஆரியசிங்கா ஆகியோர் கடந்த சனிக்கிழமை ஆனையிறவுக்கு நேரில்சென்று இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

24 மணி நேரமும் தொடர்ச்சியாக அரசாங்க உயர் அதிகாரிகள் இப்பரிசோதனையில் ஈடுபடும் வகையில், இவர்களுக்கான பட்டியல் அரசாங்க அதிபரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

கமத்தொழில் சேவை உதவி ஆணையாளர் திரு. செந்திநாதன் இம்மாதம் இரண்டாந் திகதி காலை 10 மணி முதல் ஆனையிறவுத் தடைமுகாமில் கடமையாற்றினார். 3ம் திகதி அதிகாலை 2 மணிமுதல் கிளிநொச்சி காணி அதிகாரி திரு. கே. பரமேஸ்வரன் இங்கு பணிபுரிந்தார்.

நேற்று 3ம் திகதி காலை 6 மணிமுதல் இரவு 6 மணிவரை பரந்தன் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். இராமநாதன் ஆனையிறவு தடைமுகாமில் கடமையில் ஈடுபட்டிருந்தார். இன்று 4ம் திகதி காலை 6 மணிமுதல் இரவு 6 மணி வரை காணியதிகாரி திரு. மகிமோகன் கடமையாற்றுவார். நாளை 5ம் திகதி இரவு 6 மணி வரை காரியாதிகாரி திரு. கே. பொன்னம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு நியமிக்கப்பட்டுள்ள அரசாங்க உயர் அதிகாரிகளுக்கு உதவியாக இருப்பவர்கள் நெல், அரிசி மூடைகளை பரிசோதனை செய்வதில் ஈடுபடு

[6-ம் பக்கம் பார்க்க]

## ரயில், பஸ் கட்டண உயர்வு இன்று முதல் அமுல்

கொழும்பு, திங்கள்

ரயில், பஸ் கட்டண உயர்வு இன்று முதல் அமுலுக்கு வருகிறது. பொதுமக்கள் அவசியமற்ற பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேவேளையில் ரயில், பஸ் கட்டணங்களைக் குறைக்கும்படியும், அன்றேல் பதவியைத் துறக்கும்படியும் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சி எம். பி.யும், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான திரு. ஆர். பிரேமதாசா.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இருந்துவந்த 10 ரூபா 90 சத ரயில் கட்டணம் இன்று முதல் 16 ரூபா 40 சதமாக உயர்த்தப்படுகின்றது. காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு இருந்துவந்த 11 ரூபா 40 சத கட்டணம் 17 ரூபா 40 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு இதுவரை 9 ரூபா 60 சதமாக இருந்த கட்டணம் இன்று முதல் 14 ரூபா 40 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### பஸ் கட்டணம்

இதுவரை ஒரு ரூபாவாக இருந்துவந்த பஸ் கட்டணம் 1 ரூபா 80 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது. ரூபா 1-25 டிக்கட்டுக்கு இன்று முதல் 2 ரூபா 20 சதம் வழங்கவேண்டும். 4 ரூபா 80 சதமாக இருந்துவந்த கட்டணம் 8 ரூபா 80 சதமாக உயர்ந்துள்ளது.

### இலவசபஸ் சேவைரத்து

இ. போ. ச. பஸ் கட்டண உயர்வை அடுத்து சபை ஊழியர்களை காரியாலயங்களுக்கு அவர்களை எடுத்துச் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்டுவந்த விஷேச இலவச பஸ் சேவை இன்று முதல் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இ. போ. ச. ஊழியர்களுக்கு இலவச பஸ் பிரயாணம் ரத்துச் செய்யப்பட்டு அவர்களுக்கு சலுகை அடிப்படையில் சீசன் டிக்கட்டுகள் வழங்கப்படும்.

இ. போ. ச. அதிகாரிகள் அவசிய அலுவலக தேவைகளுக்கு மட்டுமே அலுவலக வாகனங்களைப் பாவிக்க வேண்டும் என்றும் சபைக்குச் சொந்தமான கார்களைப் பாவிப்பதற்கு இ. போ. ச. தலைவரின் நேரடி அனுமதியைப் பெற வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## கடைக்குள் பாய்ந்த லொறி மூதாட்டியை பலிகொண்டது

யாழ்ப்பாணம், திங்கள்

வேகமாக வந்து கொண்டிருந்த லொறியொன்று வீதியின் அருகே நின்ற டிராக்டர் ஒன்றுடன் மோதி மதகு ஒன்றை உடைத்துக் கொண்டு கடைக்குள் பாய்ந்து கடை வாசலில் நின்ற மூதாட்டி ஒருவரைப் பலி கொண்ட சம்பவம் ஒன்று நல்லூர் அரசடி வீதியில் நேற்று மாலை இடம் பெற்றது.

நல்லூரைச் சேர்ந்த நாகராசா ரத்தினம்மா என்னும் மூதாட்டி தமது வேலைக்காரச் சிறுமியான சாந்தியுடன் சென்றபோதே லொறி விபத்துக்குள்ளாகி மரணமானார். வேலைக்காரச் சிறுமி பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த வல்லிபுரம் நடேசு (வயது 52) கடைச் சொந்தக்காரரான வேலு சின்னராசா (வயது 52) வல்லிபுரம் அருணாசலம் (வயது 55) ஆகியோரும் இந்த விபத்தில் சிக்குண்டு பலத்தகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான லொறியின் சாரதியான இரத்தினம் என்பவரை நல்லூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜனாப் ஹமீட் கைது செய்து விளக்க மறியலில் வைத்துள்ளார்.

[ஆனை. நி.]

## திருமண அழைப்பு

கருணா — கௌரி

திரு. உமாபதி கந்தசாமி (இளைப்பாறிய சிருப்பர்) திருமதி கந்தசாமியினது மகனும், திரு. க. இருபாகரன் (உரிமையாளர் ஹரன் ஜுவல்லர்ஸ்) திரு. க. ஞானகரன் (ஹரன் ஜுவல்லர்ஸ்) ஆகியோரின் சகோதரனுமாகிய திரு. க. கருணாகரனுக்கும் (திருக்கோணமலை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்) திரு. அ இராசா (முன்னைநாள் கொழும்பு கொம்மேஷல் கம்பனி) திருமதி இராசாவினதும் புதல்வி செல்வி கௌரிக்கும் தைத்திங்கள் 25ஆம் நாள் 7-2-74 மாலை 7 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் திருமணம் நடக்க இருப்பதால் உற்றார் உறவினரை அன்புடன் அழைக்கின்றோம்.

'உமாபதி'
57, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்

மணமகனின் பெற்றோரும்,
சகோதரரும்

### 21 பேர் பலி

(புதுடில்லி, பெப். 3)

ஹிமாலயப் பிரதேசத்தில் ஏற்பட்ட மண் சரிவில் சுமார் 21 பேர் இறந்துள்ளனர். என்று புதுடில்லியில் [illegible] வெளிவந்துள்ளன

## "பிரிவுக்குத்தான் தூபமிடுகிறார்கள்"

சென்னை, பெப். 3

பிரிவினைச் சாயம் பூசி, மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் புறக்கணிப்பதின் மூலம் நாடு சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்துபோவதற்குத்தான் வழி வகுக்கும் என்று தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்றுக் கூறினார்.

முரசொலி மாறன் எம். பி. எழுதியுள்ள மாநில சுயாட்சி கோரிக்கை என்ற நூலை வெளியிட்டுவைத்து உரை நிகழ்த்துகையிலேயே திரு. கருணாநிதி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கான ஆதாரபூர்வமான பல காரணங்களை தமிழ்நாடு அரசு எடுத்துக்காட்டிய பின்னும் பிரிவினைக் கூச்சல் கிளப்பி

6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

உயர்ந்தரக மரவள்ளித் தடிகள், மிளகாய் நாற்றுகள், வாழைக்குட்டிகள் விற்பனைக்குண்டு. குறைந்த விலை. லேடன் பாம், கோப்பாய். தொலைபேசி: 330. 933

மருதனுமடத்தில் இருந்து சுன்னாகம் போகும் றோட்டில் முதலாம் கட்டைக்கு சமீபத்தில், ஆலடி என்னும் இடத்தில் 14 பரப்புக் காணி முழுதாகவோ, பகுதியாகவோ விற்பனைக்குண்டு. விபரங்கள் நேரில் அறிந்து கொள்ளலாம். மு. நமசிவாயம், இளைப்பாறிய ஆசிரியர், மல்வம், உடுவில். 938

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் வீடுடன் நான்கு இலாச்சக்காணிக்கு ரூபாய் 70000/- கட்டுக்காசுத் தேவை. பிராஜ்மல் என்ரப்பிறைசஸ், அதயமுத்து மாளிகை, 213/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 171

தனங்கிளப்பில் காணி-விற்பனைக்கு. சாவகச்சேரி-கேரதீவு பஸ் றோட்டில். 1 ஏக்கர், 4 ஏக்கர் கண்டங்கள். தென்னை நட உகந்தவை. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: திருமதி ஜயசிங்க, வளவுவத்தை, விடாங்கொடை. 943

### கல்வி

ஜி. சி. ஈ. 1974 ஆங்கில இலக்கியம். இலக்கணம் (Emma, Jungle Tide, Macbeth, English Prose) ஆங்கிலப் பேச்சு (Spoken English வகுப்புகளில் அந்து சுற்றுக் கொடுக்கப்படும். இலக்கியம் ... நோக்கும் ... விபரம் ... 164 ... வீதி, யாழ்ப்பாணம். 164

### வைத்தியம்

ஹோமியோபதி டாக்டர் பயிற்சி, மருந்து, சிகிச்சை போன்ற தங்கள் சகலதேவைக்கும், வலையுடன்னான இடைவிடாத சேவையில் இயங்கிவரும் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். National Institute of Homoeopathy 184/A நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 155

ஹோமியோபதி-சித்த ஆயுர்வேத டாக்டர்களுக்கும், மாணவர்களுக்கும் தபால்மூலம் பயின்றவர்களுக்கும் விசேட நேர்முகப்பயிற்சி வகுப்புகள் சனி, ஞாயிறு நடைபெறுகிறது. நேரில் வரவும். 74, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 919

### இலவசம்

ஜி. சி. ஈ. (சாதாரண/உயர் தரங்களுக்கு) வர்த்தகம், கலை, விஞ்ஞான பாடங்களில் போதிக்கும் "நொதேர்ண் பெஸ்ட்" இன்ஸ்ரிரியூட்டர் வைண்டர்கள் வழங்குகிறோர்கள். முத்திரையிட்ட அஞ்சலுறையை 70, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பவும். 194

### வகுப்புகள்

றேடியோ வகுப்புக்கள் செய்முறை பயிற்சி விளக்கங்களுடன் நடைபெறும். எல்லா விபரங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். "நோர்த் சிலோன் றேடியோ அன் இலக்ரோனிக் லபோட்டரி", (கே. கே. எஸ். றோட், கொக்குவில்.) 942

EDUCATION
Special English classes
T. T. Jayaratnam, Education Bureau, Tellippalai.
937


# 333 பேருக்கு 9-ம் திகதி 'தண்ணீர்பம்பு' கிடைக்கும்

யாழ்ப்பாணம், திங்கள் நீரிறைக்கும் இயந்திரக் கோரி விண்ணப்பித்துள்ளவர்களில் 333 பேருக்கு வருகிற சனிக்கிழமை முதல் அதற்கான பர்மிட் வழங்கப்படவுள்ளது. காரியாதிகாரிகளினால் தெரிவுசெய்யப்பட்டுள்ள விவசாயிகளின் பட்டியலில் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளவர்களின் வரிசையில் இந்த இயந்திரம் வழங்கப்படும்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. முருகேசம்பிள்ளை இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இவ்வருடம் 2500 நீர் இறைக்கும் இயந்திரங்கள் தேவை என்று அரசாங்கத்திடம் கேட்டிருந்ததாகவும் ஆனால் தட்டுப்பாடு காரணமாகத் தற்போது 333 இயந்திரங்கள் மட்டுமே கிடைத்திருப்பதாகவும், ஒவ்வொரு மூன்று மாதத்திலும் இயந்திரங்கள் கிடைக்குமென்றும், அவ்வப்போது காரியாதிகாரிகளின் பட்டியலில் உள்ளபடி விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றின் மூலம் இந்தியாவிலிருந்து உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்து இலங்கையில் இயந்திரங்களை உற்பத்திசெய்வதென்று திட்டமிடப்பட்டிருந்ததாகவும் ஆனால் இந்தியாவில் இடம்பெற்ற வேலைநிறுத்தம் காரணமாக உதிரிப்பாகங்களை இறக்குமதிசெய்வதில் சுணக்கம் ஏற்பட்டதாகவும் இதனாலேயே தேவையான அளவு நீரிறைக்கும் இயந்திரங்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாமற்போய் விட்டதென்றும் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

ஒவ்வொரு மூன்று மாதமும் கிடைக்கப்பெறும் இயந்திரங்கள் அவ்வப்போது பகிர்ந்து கொடுக்கப்படுமென்றும் அவர் சொன்னார். யாழ் மாவட்டத்திலுள்ள 17 காரியாதிகாரி பிரிவுகளையும் சேர்ந்த விவசாயிகளுக்கு ஒவ்வொரு பிரிவினருக்கும் 20 இயந்திரங்கள் வீதம் தற்போதைய 333 இயந்திரங்களும் பகிர்ந்து வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (ஈ)

கிரிக்கட்

## வெற்றி தோல்வி இல்லை

(கண்டி, ஞாயிறு)

இந்தியக் கோஷ்டிக்கும், இலங்கைகிரிக்கட் சபைத் தலைவர் கோஷ்டிக்குமிடையில் கட்டுகாஸ்தோட்டையில் நடைபெற்ற மூன்றுநாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்தியா இன்று தனது 2-வது இன்னிங்ஸில் 3 விக்கெட் நஷ்டத்துக்கு 283 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் வீரர் மன்காட் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களைப் பெற்றார். கவஸ்கர் 52 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கைக் கோஷ்டி இன்றைய ஆட்டம் முடிவடையும்போது 5 விக்கெட் நஷ்டத்துக்கு 199 ஓட்டங்களைப் பெற்றது. டி.மெல் டின் 82 ஓட்டங்களையும், அஜித் தா செனிவிரட்ண 55 ஓட்டங்களையும் பெற்றனர். (தே.தி)

[யாழ்ப்பாணம், திங்கள்] ஜனவரி மாதம் 28-ந் திகதியில் இருந்து மீண்டும் அரிசி வெட்டை அமுல்படுத்தியதுக்கெதிராக இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் வடபிரதேச கமிட்டி பிரதம மந்திரிக்கு கண்டனக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

## இங்: 131

திரினிடாட், பெப். 2

மேற்கிந்தியக் கோஷ்டிக்கும், இங்கிலாந்துக்கோஷ்டிக்குமிடையில், நேற்று மேற்கிந்தியாவில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட்கிரிக்கெட் போட்டியின் முதலாவது நாளே இங்கிலாந்துக் கோஷ்டிசகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 131 ஓட்டங்களைப் பெற்றது. நேற்றைய ஆட்ட முடிவில் மேற்கிந்தியக்கோஷ்டி விக்கெட் நஷ்டமின்றி 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# சங்கச் செய்திகள்

யாழ்ப்பாணக்குடாநாட்டின் இயற்கை வளங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்களை முன்வைத்து இயற்கை வள அபிவிருத்தி இயக்கம் என ஒரு புதிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொது நூலக மேல் மாடி மண்டபத்தில் திரு. பி. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த இயக்கத்தின் கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. பி. சண்முகநாதன் (நில நீர் ஆராய்ச்சிப் பகுதி தலைமை ஆராய்ச்சிப் பொறியியலாளர்), உபதலைவர்கள்: திரு. எஸ்.ரி கந்தையா (ஓய்வு பெற்ற நீர்ப்பாசனப் பொறியியலாளர்), திருமதி அ. சுவாமிநாதன், திரு. ஆர். சுந்தரலிங்கம், திரு. எஸ். கனகரத்தினம் (தலைவர், சாவகச்சேரி நகரசபை), செயலாளர்: திரு. க. நடேசபாபதி, உபசெயலாளர்: திரு. வே. ஏரம்பமூர்த்தி, பொருளாளர்: திரு. வீ. சிவலிங்கம், உபபொருளாளர்: திரு. க. பூரணசற்குணநாதன்.

0 0 0

யாழ்ப்பாணம், திங்கள்

அ. இ. முஸ்லிம் முற்போக்கு இயக்கத்தின் வருடாந்தக் கூட்டம் யாழ். மீரானியாய்க் கல்லூரியில் எம். ஜமீல் இரு அத்துடன் எம். எஸ். நஸீம் தலைமையில் நடாத்தப்பட்டபோது நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீத், உப தலைவர் ஏ எல் எம் ஏ ஹலீம், செயலாளர் ஏ ஏ எம் ஜலீல், உப செயலாளர் எம் எம் நௌஷாத், பொருளாளர் எஸ். எச். ஜமீன், உப பொருளாளர் என் ஹமீத், கணக்காளர் எம் யூ ஏ தையூக். செயற் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

(சித்தன்கேணி, ஞாயிறு)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆசிரியர்கழக ஆண்டு நிறைவுவிழா வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் கழக உப தலைவர் சங்கீதபூஷணம் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. மா. கனகரத்தினம், செயலாளர்: திரு. நா. தணிகாசலம் பிள்ளை, பொருளாளர்: திருமதி பரமநாதன்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம், திங்கள்)

றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: ம. பீற்றர், உப தலைவர்: ஜி. பி. பேர்மினஸ், செயலாளர்: ம. செபஸ்ரியன், உப செயலாளர்: ச. செ. தங்கராஜா, பொருளாளர்: பெ. அகஸ்ரின், விளையாட்டுத் தலைவர்: ச. ஜேம்ஸ். ஏழுபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

ஃ

(ஊர்காவற்றுறை, ஞாயிறு)

யாழ்ப்பாணம் லங்கா ஆயுள்வேதக் கல்லூரி வைத்தியப் பட்டதாரிகள் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

காப்பாளர்கள்: டாக்டர் ஆர். ஈ. டபிள்யூ. ஜோகோரத்தினம், டாக்டர் சுந்தரம். தலைவர்: டாக்டர் ஏ. வி. ராஜரத்தினம், உப தலைவர்கள்: டாக்டர் ஏ. குஞ்சிதபாதம், டாக்டர் எஸ். மகாலிங்கம். செயலாளர்: டாக்டர் பாலசுப்பிரமணியம். பொருளாளர்: டாக்டர் தேவமதுரம். 11 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

ஃ

(பருத்தித்துறை, ஞாயிறு)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியப் பேரவையின் புத்தாண்டு உத்தியோகத்தர்கள்:-

தலைவர்: திரு. வ. தினகரன் பிள்ளை, உப தலைவர்: திரு. எஸ். கந்தப்பு, செயலாளர்: திரு. சி. அம்பிகாவரன், உப செயலாளர்: திரு. எஸ். கே. பரஞ்சோதி, தனாதிகாரி: திரு. எம். இராமலிங்கதேவர், கணக்காய்வாளர்: திரு. த. சிதம்பரப்பிள்ளை, நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: திரு. வி. தங்கராசா, திருமதி யச்சினிதேவி கந்தவனநாதன்.

ஃ

யாழ்ப்பாணம், திங்கள்

கரைதுரைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளையின் நிர்வாகசபையின் உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு. பொ. திருநாவுக்கரசு கிராமசேவையாளர், முல்லைத்தீவு, உப தலைவர்: திரு. ஆ. பேதுருப்பிள்ளை, செயலாளர்: திரு. சு. சிவசுந்தரம், உபசெயலாளர்: திரு. சு. ஜெ. நாகராஜா, அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: பொ. நரசிங்கம், ம. கனகசூரியம், ம. சிவகுருநாதன், யோ. அந்தோனிப்பிள்ளை, இ. பிரான்சிஸ்.

0 0 0

சங்கானை, ஞாயிறு

சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன்கோவில் பரிபாலனசபையின் நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. கனகரத்தினம், காரியதரிசி: சு. திருநாவுக்கரசு, கணக்காளர்: எஸ். வே. இரத்தினசபாபதி, [illegible] ... கு. சிவசுந்தரம், கோவில் பாதுகாவலர்: த. துரைராசா.


## மாணவர்களே!

வானொலி மின்சார தொழில் நுட்ப அறிவு பெற விரும்புகிறீர்களா? அப்படியானால் இன்றே எம்முடன் தபால் தலையுடன் விண்ணப்பியுங்கள்.

வடஇலங்கை வானொலி மின்னியல் பரிசோதனை நிலையம்,
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.
175

## விவசாய இரசாயனப் பொருட்கள்

விவசாயிகளே!

உங்கள் பயிர்களை நாசஞ்செய்யும் களை, பூச்சி, கிருமி ஆகியவைகளிலிருந்து பாதுகாத்து அதிக விளைச்சலைப் பெறுவதற்குத் தேவையான சிறந்த மருந்து வகைகளைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

ஜெனரல் ஏஜென்சிஸ் லிமிற்றட்
3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

"நீற்று மணவற்பிள்ளை"

இவர் வீனப்பு மணவற்பிள்ளையின் (பிரதம லிகிதர், கமத்தொழில் சேவை இலாகா, திருகோணமலை) அன்பு மனைவியும், திரு, திருமதி P. S. சின்னதுரை (பிரபல வியாபாரி)யின் அருமைப் புத்திரியும், இளமன்று, மனவரசயர் (பொறியியலாளர், கனடா), ரஞ்சிதம், பிக்லி, இறின்ரில்டா, சீதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், J. மரியாம்பிள்ளை (பிரதம லிகிதர், கொழும்பு கொமேஷ்சல் கொம்பனி), A.C. இராஜதுரை பிரதமலிகிதர், புலோப்பளை), A. யோசப் வரி மதிப்பீட்டாளர், யாழ். மாநகரசபை), M. S. பேரின்பநாயகம் (ஜே. பி., எம். எம். சி.), M. S. அல்பேட் அரசாங்க ஒப்பந்தக்காரர்) ஆகியோரின் மைத்துனியும், நவரட்ணராஜா, சாமளா, சுரேஷ், பிரேமளா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 121, பாங்சால் வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து 4-2-74 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 174

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கராச்சித் துறைமுகத்தில் அரபுக் கொரில்லாக்கள்

# கைப்பற்றிய கிரேக்கக் கப்பலை வெடிவைக்கப் போவதாகப் பயமுறுத்தல்!

## ஏதென்ஸ் குற்றவாளிகளை விடுவிக்கும்படி நிபந்தனை

கராச்சி, பெப். 3

கிரேக்க நாட்டுக்குச் சொந்தமான வணிகக் கப்பலொன்றினை மூன்று பாலஸ்தீனத்தீவிரவாதிகள் பலவந்தமாக் கைப்பற்றிஅதனைவெடி வைத்துத் தகர்க்கப் போவதாக பயமுறுத்தி வருகின்றனர்.

பாகிஸ்தானில் கராச்சி துறைமுகத்தில் நின்ற இந்த வணிகக்கப்பலை ஆயுதம்தரித்த இந்த பாலஸ்தீன அரபுக் கொரில்லாக்கள் பலவந்தமாகக் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் ஏதென்ஸ் நகரில் 5 பேர் கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டு இப்போது கிரேக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இரு அரபு கொரில்லாக்களையும் விடுதலை செய்யும்படி இவர்கள் கோரியுள்ளனர்.

இதற்காக 24 மணி நேரம் கெடுவிதித்துள்ளனர். அதற்குள் இந்த இருவரும் விடுதலை செய்யப்படாவிட்டால் கப்பலை வெடிவைத்துத் தகர்க்கப் போவதாக அவர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

கப்பலின் இரு அதிகாரிகளையும் மற்றும் இப்பத்திகளையும் அவர்கள் பணயமாக வைத்துக் கொண்டுள்ளனர்.

24 மணி நேரத்துக்குள் கிரேக்க அரசு காவலில் வைத்துள்ள தமது சகாக்கள் இருவரையும் விடுதலைசெய்யாது போனால் கப்பலிலுள்ள அனைவரையும் சேர்த்து வெடிவைக்கப் போவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இக்கப்பலின் மாலுமி இருதயக் கோளாறினால் பிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

### கோரிக்கை புறக்கணிப்பு

ஏதென்ஸில் காவலில் வைக்கப்பட்டுள்ள கொரில்லாக்கள் இருவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்றகோரிக்கையை கிரேக்க அரசு புறக்கணித்துவிட்டது.

பாகிஸ்தான் அரசுக்கு கிரேக்க அரசு இது பற்றி நேற்றுத் தந்தி மூலம் அறிவித்துள்ளது.

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இருவரது தண்டனையையும் ஆயுள் தண்டனையாக்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டுவருகின்றது. கப்பலுக்கும், அதிலுள்ளவர்களுக்கும் ஏதும் நேர்ந்தால் காவலிலுள்ளவர்களின் உயிருக்கு ஆபத்தாக முடியுமென்று கிரேக்க அரசு தெரிவித்துள்ளது.

கப்பலைக் கைப்பற்றியுள்ள அரபுக்கொரில்லாக்களுடன் தொடர்புகொண்டு நிலைமையைச் சமாளிக்க பாகிஸ்தானிலுள்ள அரபுத் தூதர்கள் அனைவரும் கராச்சிக்குப் புறப்பட்டு வந்துள்ளனர். இதேசமயம் இது விஷயமாக பாகிஸ்தான் பிரதமர் ஜுல் பூட்டோ முன்னின்று நடவடிக்கைகளை எடுத்துவருவதாகக் கூறப்படுகின்றது.

### சிங்கப்பூரில் நிலைமை

சிங்கப்பூர், பெப். 3

சிங்கப்பூரில் ஷெல் கம்பனி படகு ஒன்றைக் கைப்பற்றி அதில் ஷெல் கம்பனி அதிகாரிகள் சிலரைப் பணயமாக வைத்துக்கொண்டுள்ள கொரில்லாக்கள், பத்திரமாகத் தப்பிச்செல்ல சிங்கப்பூர் சொன்ன யோசனையை அவர்கள் நிராகரித்துவிட்டனர்.

கப்பல் மார்க்கமாகத் தப்பிச் செல்ல உதவியளிப்பதாக சிங்கப்பூர் அரசு அறிவித்திருந்தது ஆனால் தாங்கள் விமானமார்க்கமாகவே செல்லவிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## 'அல் அஹ்ரம்' ஆசிரியர் பதவி நீக்கம்

கெய்ரோ, பெப். 3

எகிப்திய செய்தி ஏடான 'அல் அஹ்ரம்' பத்திரிகையின் ஆசிரியர் ஹெய்கால் ஆசிரியர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். அரசாங்க சார்பு பத்திரிகையான அல் அஹ்ரத்தின் ஆசிரியராக ஹெய்க்கால் கடந்த 17 ஆண்டுகளாகப் பணியாற்றியுள்ளார். இவர் தன்போக்கில் இயங்கிவருகிறார் என சமீபத்தில் எகிப்திய ஆட்சிமன்றத்தில் பல அங்கத்தவர்கள் குறைகூறியிருந்தார்கள். அதன் காரணமாகவே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று கருதப்படுகின்றது.

அதிபர் சதாத் இவருக்கு ஆலோசகர் பதவியொன்றை வழங்கியுள்ளார். இந்தப் பதவியை அவர் ஒத்துக்கொள்வாரா என்பது தெரியவில்லை.

# 220 பேர் தீயில் கருகி மாண்டனர்

பிரேசிலியா, பெப். 3

பிரேசில் நாட்டில் சாவோ பாலோ என்ற நகரில் வானளாவிய கட்டிடமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 220 பேருக்கு மேல் மரணமாகியுள்ளனர். 300 பேருக்கு மேற்பட்டவர்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தப் பயங்கரத் தீவிபத்து எப்படி ஏற்பட்டது என்பது பற்றி அதிகாரபூர்வமாகச் செய்திகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

கட்டிடத்தின் இடிபாடுகளில் மேலும் பலரின் சடலங்கள் கிடைக்கலாம் என்ற சந்தேகத்தில் மீட்புபடையினர் இன்னமும் தேடுதலில் ஈடுபட்டுவருகின்றனர்.

இத் தீவிபத்தின்போது தீயணைக்கும் படையினருக்கு போதிய கருவிகளும், வசதிகளும் இருக்கவில்லை. இதனால் பலரின் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது என்று தீயணைக்கும் படையின் தலைவர் குறைகூறியிருக்கிறார். இதன்காரணமாக அவர் பிரேசில் அரசினால் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

### அரசியல் வட்டம்

(நெல்லியடி, ஞாயிறு)

வடமராட்சி அரசியல் வட்டம் என்றொரு இயக்கம் வடமராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த திரு. வ. மகாலிங்கம் கவனித்து வருகிறார்.

(ஈ)

### இன்றைய பலன்

மேஷம்- கைநிறையப் பணம் தாராளமாகக் கிடைக்கும். புதிய விருந்தினர்கள் உங்களைத் தேடிவருவார்கள்

ரிஷபம்- நடையில் தயக்கம் ஏற்படும், உங்கள் விடயத்தில் உண்மையும் ஊமையாய் விடும்.

மிதுனம்- மனப்போராட்டம் அதிகரிக்கும், உறவினர் ஒருவர்மீது ஆத்திரம் பிறக்கலாம், பொறுமை நன்று.

கடகம்- எழுத்தாளருக்கு சிறப்பான தினம், இருக்குமிடத்தில் ஆதரவு பெருகும், சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம்.

சிம்மம்- பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும், தொழில் துறையிலும்பின்தங்கநேரிடும்.

கன்னி- நல்லதைச் செய்வீர்கள், நலன் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள்.

துலாம்- சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துவர், வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

விருச்சிகம்- உறவாடிக் கொடுப்பதற்கு பகையாளிகள் வருவர், பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும்.

தனுசு- வெற்றி உமது அருகில் விரைந்து வரும், எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள்.

மகரம்- அன்னியர் சகவாசமும் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும், சிறிய விடயத்திற்குக்கூட அதிக ஆத்திரம் ஏற்படலாம்.

கும்பம்- இதயத்திற்கு இதந்தரும் செய்தியொன்றும் கிடைக்கலாம், புண்ணிய கருமங்களில் விருப்பம் மேவிடும்.

மீனம்- புதிய தொழில்களில் மனதைச் செலுத்துவீர்கள், இடமாற்றமொன்றுக்கும் முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

சோதிடக் கலாநிதி
இணுவை க. வேலுப்பிள்ளை

### கோலானில் தொடர்ந்து மோதல்

(டமாஸ்கஸ், பெப். 3)

சிரியாவுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் நேற்றும் கோலான் மலைக் குன்றப்பகுதியில் கடுஞ் சண்டைகள் நடைபெற்றதாக சிரிய ராணுவத் தலைமைப் பீடம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலியருக்கு கடும்சேதங்களை ஏற்படுத்தியதாக சிரியர் கூறினார்கள். இதுபற்றிய இஸ்ரேலியர் எதுவித தகவலும் வெளியிடவில்லை.

### திறப்புவிழா

(ஆனைக்கோட்டை, ஞாயிறு)

சைவபரிபாலன சபையினரின் நூல்நிலையத் திறப்புவிழா நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் தைப்பூசத் தினமான வருகிற புதன்கிழமை காலைநடைபெறவுள்ளது.

### லொறிச்சாரதிகள் வேலை நிறுத்தம்

# பிரிட்டனில் பல இடங்களில் குழப்பம்; துப்பாக்கிச் சூடு!

லண்டன், பெப் 3

பிரிட்டனில் எரிபொருள் விலை ஏற்றத்தை எதிர்த்து சொந்த லொறி வைத்து ஓட்டுபவர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து நாட்டின் பல ராஜ்யங்களில் வன்முறைகளும் குழப்பங்களும் இடம்பெற்றுள்ளன.

பல இடங்களில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் கல்வெறிகளும் இடம்பெற்றுள்ளன. இதனால் காவல்படையினர் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். வன்முறைகளை அடக்குவதற்காக காவல்படையினர் விமானங்களையும்ஹெலிகொப்டர்களையும் பயன்படுத்துகின்றனர். இதுவரை 100க்கும் மேற்பட்டவர்கள் பல இடங்களிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### மலாவியில் பிரி. மந்திரி

(லுசாக்கா, பெப். 3)

சாம்பியாவுக்கு விஜயம் செய்திருந்த பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் அலக் டக்லஸ் ஹியூம் மலாவிக்கு சென்றுள்ளார். அங்கு அந்நாட்டுத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திய பின்னர் சேர் அலக் தான்சானியாவுக்கும் கென்யாவுக்கும் செல்வார் என்று தெரிகின்றது.

### இந்தியா உன்னிப்பாக கவனிக்கிறது

பாகிஸ்தான் நவீன ராணுவ சாதனங்களை வாங்கிக் குவித்து வருவதை இந்தியா மிகவும் கவனமாக அவதானித்துவருகின்றது. இத் தகவலை இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட்டுள்ள நவீன போர்விமானங்கள் [illegible] பிரதேசத்தில் பறந்துவருவதாகவும் பாகிஸ்தானியருக்கு இவ்விமானங்களில் பயிற்சிபெறுவதற்காகவும், விமானங்களை வழங்கிய நாட்டினரே இந்தப் பயிற்சிகளை அளித்து வருகிறார்கள் என்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆயுதத் தயாரிப்பில் இந்தியா தன்னிறைவு பெற்றுள்ளது. இதனை மேலும் விஸ்தரிக்க ...

அமைச்சர். நாட்டைப் பாதுகாப்பதற்கான சகலமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிய போர்க்கைதிகளையும் மற்றவர்களையும்வைத்தும் பராமரிப்பதற்காக கடந்த ஆண்டு 30 கோடி ரூபாய்வரையில் இந்தியா, செலவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆப். எல்லையில் ராணுவம் உஷார்!

## பாக். கெடுபிடி காரணம்

காபூல், பெப். 3

ஆப்கானிஸ்தான் தனது எல்லைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தி வருகின்றது.

இத்தகவலை ஆப்கானிஸ்தான் அதிபர் ஜெனரல் தாவூத் அறிவித்திருக்கிறார்.

எல்லைப்பகுதிகளில் பாகிஸ்தான் தனது படைகுவிப்பை அதிகரித்து வருவதால் ஆப்கானிஸ்தான் தனது எல்லை அரண்களை வலுப்படுத்தநேர்ந்துள்ளது என்று ஜெனரல் தாவூத் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அமைதியாக நடந்த கூட்டத்தில் பொலிசாரின் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை"

## மக்கள் குழு விசாரணையில் பெண் தொடர்ந்து சாட்சியம்

(நமது நிருபர் கா யோகநாதன்)

"சம்பவம் நடந்த இடத்திலிருந்து பஸ் நிலையம் நோக்கி ஓடினேம். அப்போது என் கண் எரிந்தது. எனக்கு மயக்கமாக வந்தது. இது தான் கண்ணீர்புகை, பயப்படவேண்டாம்' எனக்கணவன் கூறினார். அதன் பின் கைக்குட்டையை தண்ணீரில் நனைத்து என் கண்களில் வைத்தார், அமைதியாக நடக்கும் கூட்டத்தில் பொலிசாரின் இவ்வித தாக்குதலை நாம் எதிர்பார்க்கவில்லை."

பத்தாம் திகதி தாக்குதல் பற்றி நடந்த மக்கள் குழு விசாரணையில் சாட்சியமளித்த புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி லக்ஷ்மணன் மேற்கண்டவாறு கூறினர்.

முன்னாள் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் [தலைவர்] பிஷப் எஸ். குலேந்திரன், முன்னாள் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் ஆகியோர் முன்னிலையில் இவ் விசாரணை நடைபெற்றது. சட்டத்தரணி எஸ். தம்பித்துரை சாட்சிகளை ஆஜர் செய்தார்.

திருமதி பரமேஸ்வரி சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

"என் கணவர்வருமானவரித் திணைக்களில் கடமையாற்றுகிறார். 10-ம் திகதி நடந்த சம்பவம் ஞாபகமிருக்கிறது வெளிநாட்டு அறிஞர்களை நேரில் பார்க்கவும். அவர்கள் பேச்சைக் கேட்கவும் அன்று சென்றேம். அன்று பிற்பகல் 6 மணிக்கு நானும் எனது கணவரும் 6 வயது பெண் குழந்தையும் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்து சேர்ந்தோம் மண்டபத்திற்கு வெளியில் றீகல்தியேட்டருக்கு எதிரில் இருந்தோம். அப்போது மண்டபத்திற்குள் கூட்டம் ஆரம்பமாகிவிட்டது.

திரு. கிரெட்ஸர்: ஏன் உள்ளே போகவில்லை? மண்டபம் நிறைந்து வழிந்தது.

திரு. கிரெட்ஸர்: வளவிற்குள்ளும் ஆட்களா? ஆம். அப்போது கனேடிய பெண்மணி பேசிக்கொண்டிருந்தார். அதன்பின் ஜேம்ஸ் ரத்தினம், மற்றும் சிலர் பேசினர்கள்.

பஸ் சேவை இரவு 10-30 மணிவரை இருக்குமென மாநாட்டு குழுவினர் அறிவித்தனர். அப்படியிருந்திராவிடில் 9 மணிக்கே புறப்பட்டிருப்போம் உள்ளே சான்றிதழ்கள் வழங்கப்பட்டபின், கூட்டம் இரவு 8-30 மணிக்கு வெளியில் சிகாத்தின்கீழ் ஆரம்பமானது. எங்களுக்கு முன்னால் வேறு ஆட்கள் இருந்தார்கள். மக்கள், அமைதியாக இருக்கும்படி கூறினார்கள். அறிஞர் நைனா முகமது தமிழர் பண்பாடு, கலாச்சாரம் பற்றியும், நகர அலங்காரம் பற்றியும் பேசினர்.

திரு. கிரெஸ்டர்: மக்கள் கைதட்டினர்களா? ஒவ்வொரு வசனம் முடியும் போதும் கைதட்டினர்கள். அப்போது ஒருவானும் டிரக்கும் வந்தது. ரோட்டில் இருந்தவர்கள் எழுந்து வழிவிட்டனர். நாங்கள் பேச்சைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தோம். அமைதியாக நடக்கும் கூட்டத்தில் பொலிசார் தாக்குதல் நடத்துவார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை. வானும், டிரக்கும், மக்கள் கூட்டத்தின் நடுவில்நின்றது. 15 அல்லது 20 பொலிசார் இறங்கினர்கள். மேடையை நோக்கிச் சென்றனர். நான் எழும்பி நின்றுபார்த்தேன். அப்போது சூட்டுச் சத்தம்கேட்டது. மக்கள் எழுந்து ஓட ஆரம்பித்தனர். கீழே இருந்த என் கணவனுக்கு இவைதெரியாது. எனது பிள்ளையை கையில் பிடித்தபடி ஓட ஆரம்பித்த போது பலர் என்பின்னேமீது விழுந்தனர்."

### தாலிக்கொடி சங்கிலியை அறுத்தனர்

"எனது கணவர் ஓட ஆரம்பித்தபோது அவரின் கைக்கடிகாரத்தைப் பறித்துவிட்டனர். எனது கழுத்திலிருந்த தாலிக்கொடியையும் சங்கிலியையும் அறுத்தார்கள் 'ஐயோஎன்கொடி' என்று குளறினேன். சங்கிலியின்பகுதி என் கைபிடியில் இருந்தது சங்கிலி அறுபட்டிருந்தது. அப்போது எனக்கு குழந்தையின் உயிர்தான் பெரிதாக இருந்தது. நெருக்கத்திலிருந்து பிள்ளையை மீட்டேன் அங்கு தாலிக்கொடி விழுந்திருக்கும் எனக் கணவன் சுற்றிப்பார்த்தார்.

### அடித்து துரத்தினர்

"முன்னால் இருந்தவர்களை பொலிஸார் அடித்து, இருக்க வேண்டாம் ஓடுங்கள்" என்று துரத்தினர்கள். கொடியை தேடினால் அடி கிடைக்கும் என்ற பயத்தினால் ஓடினேம் அப்போது மற்றொரு வெடிச் சத்தம் கேட்டது. ஆகாயத்தை பார்த்தேன். ஒரு குண்டு எங்களை நோக்கிவந்து அருகில் விழுந்தது. அதன் புகையால் தாக்கப்பட்டு ஓடினேம். சிறிது நேரம் கழித்தபின்னால் ரோட்டில் தங்கி நின்றேம். மீண்டும் பொலிஸார் மக்களை விரட்டி அடித்தார்கள் பொல்லும் தடியுமாக 'ஓடுங்கள்' எனப் பொலிஸார் துரத்தினர்கள். வழியில் சிலர் தங்கள் வீட்டில் எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வந்தனர். என் கணவர் பஸ்ஸிற்கு செல்வோம் எனக் கூறினர். அவர் அங்கு சென்ற போது, பொலிசார்தொடர்ந்து தாக்கினர்கள். பஸ் நிலையத்தில் நிற்கக்கூடாது எனப் பொலிசார் கூறினர்கள். வடக்குப்பக்கமாக ராணி தியேட்டருக்கு ஓடினேம். தியேட்டருக்குள் வருமாறு மனேஜர் கூறினர். இதற்குள்ளும் பொலிசார் வந்து எங்களைச் சுட்டுத் தள்ளிவிடுவார்களா? எனக் கணவனைக் கேட்டேன்.

திரு. இறெண்டர்: தாலிக் கொடி காணாமற்போனது பற்றியா? ஆம்.

திரு. கிரெஸ்டர்: இப்பொழுது வெளியில் கூறினீரா? பயத்தினால் கூறவில்லை.

எனது கொடி நிறை 7பவுண். தாலிநிறை ஒருபவுன். பக்கப்பவுண் 1. எல்லாமாக 9 பவுண், தற்போதுள்ள விலைக்கு 3000 ரூபா பெறுமதியாகும்.

திரு. மாணிக்கவாசகர்: பொலிசாருக்கும் கல்லெறி விழுந்ததா? எனக்குத் தெரியாது.

திரு. மாணிக்கவாசகர்: போத்தல் எறியப்பட்டதா? தெரியாது.

சாட்சியமளித்த பரமேஸ்வரியிடம் சட்டத்தரணி எஸ் தம்பித்துரை ஒரு கட்டத்தில் அன்று நடந்த சம்பவம் இன்று ஞாபகமிருக்கிறதா? என்று கேட்டபோது எப்போதுமே ஞாபகமிருக்கும் எனப் பரமேஸ்வரி கூறினர்.

மற்றொரு கட்டத்தில் திரு. தம்பித்துரை கணவனின் கைக்கடிகாரத்தின் பெறுமதி 250 ரூபா இருக்குமா? எனப் பரமேஸ்வரியிடம் கேட்டபோது அது அவரைத்தான் கேட்க வேண்டும் என்று பதிலளித்தார்.

பரமேஸ்வரியிடம் விசாரணைக்குழுத்தலைவர் மக்கள் மத்தியில் இருவாகனமும் எதற்காக நின்றது எனக் கேட்ட போது தெரியாது என்றார்.

திரு கிரேஸ்டர்: வீரசிங்கம் மண்டபத்திலிருந்து ... உள்ளவர்கள் விலத்தாவிடில் பலாத்காரம் பாவிக்கப்போவதாக பொலிசார் சொன்னார்களா? இல்லை.

திரு. கிரெஸ்டர் அவர்கள் சொல்லிக் கேட்கவில்லையா? அல்லது அவர்கள் சொல்லவில்லையா? சொல்லிக் கேட்காமல் விட்டிருக்கும்.

திருகிரெண்டர்: உங்களுக்குக் கேட்கவில்லையா? இல்லை.

திரு. கிரேட்ஸர் ஒலிபெருக்கியில் சொல்லியிருந்தால் கேட்டிருக்கும்?- சொல்லவில்லை.

திரு. கிரெஸ்டர் சொல்லியிருந்தால் கேட்டிருக்கும்? ஆம். பொலிஸ் மைக் மேற்குப்பக்கமாக இருந்தது. அது எங்களுக்குக் கேட்காது"

திரு. கிரெஸ்டர்: பொலிசார் பேசியிருந்தால் கேட்டிருக்கும்?- நான் கவனிக்கவில்லை. அறிஞரின் பேச்சில் லயித்திருந்தேன்.

## "இரவு முழுவதும் தியேட்டரில் விழித்திருந்தோம்"

"ஒருத்தரும் பயப்படவேண்டாம். தூரத்திற்குச் செல்ல வேண்டியவர்களை காப்பாற்றுவோம் எனத் தியேட்டர் மனேஜர் கூறினர். அப்போது காரைநகர் பஸ்ஸில் வந்த ஒருவர், பஸ்நிலையத்தில் பொலிஸார் அடிப்பதாகக் கூறினர். அன்றிரவு தியேட்டரில் தங்கினேம். காலைவரை விழித்திருந்தோம். மறுநாட்காலை வீரசிங்கம் மண்டபத்திற்குச் சென்றேம். தாலிக்கொடி பற்றிக் கேட்டோம். செருப்புக்களும் சைக்கிள்களுந்தான் கிடந்ததாகக் கூறினர்கள்.

### தாலிக்கொடிபற்றி பொலிஸில் புகார்

பொலிஸ் நிலையத்திற்குச் சென்று புகார் செய்தோம்.

### நாகராசா சாட்சியம்

முன்னாள் மேயர் திரு. இ. நாகராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

10 வருடமாக நான் யாழ் மாநகரசபை உறுப்பினராக இருக்கிறேன். இருதடவை மேயராகவும் இருந்திருக்கிறேன். யாழ்ப்பாணத்திலுள்ள 90 சத விதமான மக்களை எனக்குத் தெரியும். தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள் வீரசிங்கம் [illegible] யம், இறந்தவெளியரங்கு [illegible] டிக்குளம் பகுதிகள் [illegible] ஆகிய வற்றில்நடைபெற்றது. அமைதியாக எவ்வித சச்சரவுமின்றி மக்கள் ஆதரவுடன் நடைபெற்றது. பிரதான வீதிகள் மட்டுமன்றி குறுக்கு ஒழுங்கைகள்கூடவும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மக்கள் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினர்கள்.

10-ந் தேதி பிற்பகல் 6 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டேன் எனது மனைவி, பிள்ளைகள், சகோதரிகளும் வந்திருந்தனர். பொதுசன நூல் நிலைய வீதியால், இறந்த வெளிச்சந்திக்குக் காரில் வந்தேன். இறந்தவெளியரங்கில் ஒருவரையும் காணவில்லை. கதவு பூட்டப்பட்டிருந்தது. பொலிசார் றீகல் தியேட்டர் பகுதியில் என்னைச் செல்லவிடாது தடுத்தார்கள். மூற்ற வெளியில் காரைக்கொண்டு போய் நிறுத்தும்படி சொன்னர்கள். வசதியான இடத்தில் காரை நிறுத்தினேன். மண்டபத்திற்குள் நடந்தநிகழ்ச்சிகளைக் கேட்கக்கூடியதாக இருந்தது. அங்குநின்ற ஜஸ்டிஸ் ... சத்தத்தினால் பேச்சுக்கள் தெளிவாகக் கேட்கவில்லை. அங்கு நான்கு பொலிஸார் நின்றனர். அவர்கள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு நின்றர்கள்.

அப்போது, வெளியில் கூட்டம் வைக்க ஒழுங்குகள் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. 8 மணியளவில் சுமார் 50,000 மக்கள் திரண்டிருந்தனர். முதலில் அறிஞர் நைனா முகமது பேசினர் தமிழின் சிறப்பைப்பற்றி அவர் கூறினர். அவர் பேச்சில் மக்கள் தங்களையே மறந்திருந்தனர்.

### ஆயுதப் பொலிஸார் வந்தனர்

அப்போது ஒரு ஜீப்பும் அதைத் தொடர்ந்து ஒரு டிரக்கும் வந்தது. றீகல் தியேட்டருக்கு முன்னால் வாகனங்கள் நின்றன. வாகனங்களுக்குள் ஆயுதந்தரித்த பொலிசார் இருந்தனர்.

வேறு ஒரு இடத்தில் இச்சம்பவங்கள் தொடர்பாக அழைக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களின் சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இச்சாட்சியங்கள்பற்றியும் குழுவினர், சாட்சிகளிடம் சில கேள்விகள் கேட்டனர்

முன்னாள் நில அளவையாளர் திரு. பேரின்பநாயகம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"நான் சம்பவதினம் இறந்த வெளியரங்கிற்குச் சென்றேன். அங்கு ஒருவரும் இல்லை சந்திக்குச் சென்றபோது பொலிசார் என் காரை திசைதிருப்பி விட்டனர். அதன்பின் கூட்டம் ஆரம்பமானது. அறிஞர் நைனாமுகமது பேசும்போது டிரக் ஒன்று வந்தது. ஜீப்பை காணவில்லை. மக்கள் அமைதியாக இருந்தனர். பொலிஸ் டிரக் மக்களுக்குள் இட்டவந்தது. அப்போது அமைதியாக இருங்கள் என நைனாமுகமது கூறினர். பொலிசார் தாக்கினர்கள். மக்கள் விழுந்தடித்து ஓடினர்கள். ஒரு பெண் தன்னை பஸ் நிலையத்திற்குக் கூட்டிச் செல்லுமாறு கேட்டார். நான் அங்கு போகவில்லை என்று சொன்னேன். பொதுநூல் நிலையத்திற்குச் செல்வோம் என மனைவி ஆலோசனை கூறினர். அங்கு அரைமணி நேரம் நின்றேம்.

### துவக்குப் பிடியால் காரைத் தாக்கினர்

அதன்பின் காருக்குச் சென்றேன். நான் காரில் இருக்க பொலிசார் துவக்கினால் தாக்க முற்பட்டனர். பின் என் காரை அடித்தார்கள். இதனால் சுமார் 300 ரூபாவரை சேதம் ஏற்பட்டது. துவக்குப் பிடியினால் காரைத் தாக்கினர்கள். என் கார், பொலிஸ் டிரக்கை கடந்து சென்ற போது இத்தாக்குதல் நடந்தது.

## 'துவக்கு, குண்டாந்தடியால் பொலிசார் தாக்கினர்"

பொலிஸ் உத்தியோகத்தரினால் ஏதோ கூறப்பட்டது, அது என்ன மொழி என்பதை நான் கவனிக்கவில்லை. சில வார்த்தை கூறப்பட்டதும் மக்கள் எழுந்தார்கள். பொலிசார் தாக்க ஆரம்பித்தனர். மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர்கள். துவக்குப் பிடியினாலும், குண்டாந்தடியினாலும் பொலிசார் தாக்கினர்கள். துவக்கு வெடிச்சத்தம் அச்சமயத்தில் கேட்டது, சடுதியாக ஒரு கண்ணீர் புகைக்குண்டு விழ்ந்தது. முதல் சூட்டுச் சத்தத்தின்போது நான்புகையைக் காணவில்லை. முகமூடி அணிந்தவர்களையும் காணவில்லை.

தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் அந்த ஜீப்பில் வந்தார் என என்னால் சொல்ல முடியாது. எங்கும் பரிதாபத்துக்குரிய காட்சியாக இருந்தது. என் கார் அருகில்சென்ற போது கண்ணீர் புகையினால் தாக்கப்பட்டேன்.

நான் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். கார் வெளிச்சத்தில் பொலிசார் மக்களைத் தாக்குவதைப் பார்த்தேன்.

பிஷப் குலேந்திரன்: மண்டபத்திலிருந்து அதிக தூரத்திலும் தாக்கப்பட்டார்களா?- ஆம். என் மைத்துனர் ஒருவரின் உடைகள் பழுதடைந்திருந்தது, மற்றொரு மைத்துனரை இருவர் தூக்கிவந்தனர். அவரால் நடக்க முடியவில்லை. அவர் நாரியிலும் முழங்காலிலும் காயமடைந்திருந்தார்.

"சம்பவம் நடந்தபோது நான் துவக்குச்சூட்டுச் சத்தத்தைக் கேட்டேன்.

திரு. கிரஸ்டர்: நைனாமுகமது ஏன் அமைதியாக இருக்கும்படி கூறினர்?-டிரக் வந்ததால்.

திரு. மாணிக்கவாசகர்: டிரக் வருமுன்?- மக்கள் அமைதியாக இருந்தனர். —— (ஈ-ர)

## கொடிகளை அறுத்ததாக வழக்கு

மாவிட்டபுரம், ஞாயிறு வல்வெட்டித்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையில் கட்டப்பட்டு பறந்து கொண்டிருந்த தேசியக்கொடி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கொடி ஆகியவற்றை அறுத்தது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட எஸ். இராமச்சந்திரன், எஸ். பாலசுப்பிரமணியம், க. மனோகரன், க. சிவானந்தன், ச. மனோகரன், விஜயரத்தினம் ஆகியோர்மீது பருத்தித்துறை நீதிமன்றத்தில் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இவ் வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. தர்மலிங்கம் முன்னிலையில் எடுக்கப்பட்ட சமயம் விசாரணை மே 3-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி வேலும்மயிலும் ஆஜரானர். (ஈ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெலிங்டன்... 

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-பத்மினி
**ராணி சம்யுக்தா**

**சாந்தி** (சங்கானை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு பி.ப. 2-30
ஜெமினி-பாரதி
**அவளுக்கென்று ஓர் மனம்**

**நாகம்மாள்**
(சுன்னாகம்)
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர்-பாரதி
**உனக்கும் எனக்கும்**

REGAL (Jaffna)
Daily 4-45, 7, 9-30 p.m.
Charles Bronson
Jack Palance
in
CHATO'S LAND
(color)

**ராஜா**
[யாழ்ப்பாணம்]
தினசரி காலை 10-30, பி.ப. 2-30
6-15, இரவு 9-45
சிவாஜி - ஜெயலலிதா
நடித்த
**ராஜா**
( புதிய கொப்பி - ஈஸ்ட்மென்கலர் )

**றியோ** (நகர மண்டபம்)
யாழ்ப்பாணம்
Daily 10-30 a. m. 9-45 p. m.
**CIRCUS ON PARADE**

தினசரி பி. ப. 2-30, இரவு 6-30
முத்துராமன் - நிர்மலா - ஜெய்சங்கர் - நாகேஷ்
**நீதி தேவன்**

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ வி எம் ராஜன்
நிர்மலா
**அவள்**

**வின்ஸர்** எம். ஜி. ஆர். - அசோகன்
(யாழ்ப்பாணம்) ஜெயலலிதா - மனோரமா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**எங்கள் தங்கம்**

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி காலை 10-30, 2-30, 6-30, 9-30
★ தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
★ தமிழ்த்திரை உலகிலேயே இதுவரை செய்யப்படாத புதுமை இந்தப்படத்தில் புகுத்தப்பட்டு இருக்கிறது.
சிவாஜி - கே. ஆர். விஜயா - முத்துராமன்
பாலாஜி - நாகேஷ் ராஜ்ஸ்ரீ - மனோகர்
எம். ஆர். ஆர். வாசு நடித்த




**ரீகோ** (யாழ்ப்பாணம்)
10-00, 2-00, 6-30, 9-30 மணிக்கு
ஆஷா பரேக்
ஹெலன்
நடித்த]
**கரவன்**


# இரவு நேர சுத்திகரிப்பு சேவை ஆரம்பமானது

யாழ்ப்பாணம், திங்கள்

"மாநகரங்களைச் சுத்தமாக வைத்திருப்பதும் அசுசியைக் களைக் கட்டுப்படுத்து வதும் வேகமாக ஓர் அனைத்துலக விடயமாக மாறிவருகின்றது என்ற உண்மை, உலக சுகாதார அமைப்பு, ஐக்கியநாடுகள் தாபனம், திடமான கழிவுகளின் முகாமைக்கான நிறுவனங்கள், இன்னும் ஐரோப்பிய கழகம் உள்ளடங்க அனைத்துலக அமைப்புக்கள் இப் பிரச்னைகளில் தலையிடுவதைக் கொண்டு உணரப்படுகின்றது.

"இவ்வாறு யாழ். மாநகராட்சிமன்றத்தின் இரவுநேர நகரசுத்திகரிப்பு சேவை ஆரம்பவிழாவில் பேசுகையில் யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா கூறினர்.

யாழ். மாநகராட்சிமன்றத்தின் இரவுநேர நகரசுத்திகரிப்பு சேவையை யாழ். மேயரின் கோரிக்கையையேற்று மாநகரசபையின் நீண்டநாள் தொழிலாளியான கே. நல்லையா ஆரம்பித்துவைத்தார்.

வெள்ளியன்று நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆரம்ப வுரையை நகரசுத்திச் சேவை பொறுப்பதிகாரி திரு. சே. செல்வராஸ்வரன் நிகழ்த்தினர்.

திரு. துரையப்பா மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தெருக்கள் சுத்தமாவதைத் தடைசெய்வதில் உதவும் பொருட்டு உத்தேசிக்கப்பட்டிருக்கும் புதிய 'குப்பைகளைச் சிந்துவதற்கு எதிரான' சட்டங்கள்பற்றி பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் சமீபத்தில் அறிவித்துள்ளார்.

அண்மித்த எதிர்காலத்தில் நனவாகப் போகும் தேசிய சூழல் அசுசிக் கட்டுப்பாட்டு அதிகாரசபைமூலம் எதிர்நோக்கப்பட்டபடி சூழல் அசுசிப் பிரச்னையில் மேற்கொள்ளுவதில் அது எடுக்கப்போகும் முயற்சியில், ஒரு சிறிய அளவிலாவது, தனது பங்கைச் செலுத்தும் வகையில் இராநேரச் சுத்திகரிப்புச்சேவைகளை யாழ்ப்பாண மாநகராட்சிமன்றம் இன்று ஆரம்பித்து வைக்கிறது. நகரில் சுகாதார அம்சங்களுக்குப் பங்கம் ஏற்படுத்தாது, இக்கழிவுகள் அனைத்தையும் விரைவில் முடிவுசெய்வதன்மூலம் நகரத்தைச் சுத்தமாக வைத்திருக்கும் கடமையை எமது நகரத்தின் சுகாதாரத் திணைக்களம் நிறைவேற்ற வேண்டியதாகவுள்ளது.

"அதிகாரமளிக்கப்படாத இடங்களில் கழிவுகளைப் பறிப்பது நகரின் அழகைப் பாழ்படுத்துமென்பதுடன் குடிமக்களது சுகக்கேட்டுக்கும் வழியுண்டாகும்என்றும் கைத்தொழில்களின் வளர்ச்சி, நகரிலிருந்து மேலும் இன்னும் மிதக்கும் இருவகைக் குடிப்பெருக்கம்அரசாங்க நிர்வாகம் பரவலாக்கப்படல், உல்லாசப் பயணிகள், யாத்திரிகர்கள், உற்பத்தி அதை வர்த்தகப் பகுதிகளது செறிவு காரணமாக நவீன மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க சுகாதாரச் சேவைகளில் மாற்றம் ஏற்படவேண்டும்"

# பஸ்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமாம் இன்று

(கொழும்பு, ஞாயிறு)

அரசாங்கம் பஸ் கண்டணங்களை அபரிதமாக உயர்த்தியதை ஆட்சேபிக்குமுகமாக தினசரி பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் எல்லோரும் பெப்பிரவரிமாதம் நாலாந் திகதியான இன்று பஸ்ஸில் பிரயாணம் செய்யாது பகிஷ்கரிப்புச் செய்தல்வேண்டும் என்று அகில இலங்கை பஸ் பிரயாணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

"இ.போ.ச வினது அநியாயமான கட்டண உயர்வால் பாதிக்கப்படுவது ஏழைமக்களும், தூரஇடங்களிலிருந்து பயணம் செய்பவர்களுமேயாவர். எந்த ஒரு நாட்டிலும் இல்லாதவகையில் 100 சதவிகிதத்தால் கட்டணங்களை அதிகரித்ததால் பல நெருக்கலுக்கு இந்நாட்டு பிரயாணிகள் ஆளாகியுள்ளார்கள் என்பதையும் இலங்கை அரசு கவனித்து நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும் என்று இச் சங்கம் மேலும் கூறியுள்ளது. (ஈ)

# 800 பஸ்கள் மீண்டும் பாவனைக்கு வரும்

(கொழும்பு, ஞாயிறு)

பழுதடைந்துள்ள சுமார் 800 பஸ்கள் திருத்தப்பட்டு இன்னும் இரண்டு மாதங்களில் பாவனைக்குக் கொண்டுவரப் படும்.

போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன இத்தகவலை தங்காலையில் புதிய இ. போ. ச. நிலையமொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

பஸ்-கட்டணம் உயர்த்தப்பட்டதுபற்றி அவர் குறிப்பிடுகையில் உலக நாடுகளில் எண்ணெயின் விலைகள் அதிகரித்ததினால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்றார்.

# யாழ். நகரில் பல களவுகள் பொலிசாரிடம் சிக்கின

(யாழ்ப்பாணம், திங்கள்)

கடந்த மாதம் 10-ம் திகதி யாழ் நகரில் ஆங்காங்கே நடைபெற்ற சில களவுகளை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

கச்சேரியடியில் உள்ள உத்தரவுபெற்ற வியாபாரி ஒருவரின் கடையை அன்றிரவு உடைத்து சுமார் 1000 ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடியதாக இருவர் கைதுசெய்யப்பட்டு, அவர்களிடமிருந்து பொருட்களும் மீட்கப்பட்டன.

யாழ்ப்பாணம்குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. ஜேம்ஸ்லயனல் செல்வராசா சந்தேகநபர்களான [illegible] இருவரையும் கைதுசெய்து பொருட்களை கைப்பற்றினர். இவர்களிருவரும் தற்போது றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் இலங்கைவங்கி, யாழ். ஆஸ்பத்திரி ஆகிய இடங்களிலிருந்து களவுபோன மூன்று சைக்கிள்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். பொலிஸ் சார்ஜன்ட் ஜாங்ஸ் இரு சந்தேக நபர்களைக் கைதுசெய்து, இவர்களிடமிருந்து சைக்கிள்களை மீட்டார்.

கண்டியைச் சேர்ந்த சாமுவேல் முருகையா என்பவர் 224 ரூபா பெறுமதியான வெங்காயத்தைக் களவாடியதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு காவலில்வைக்கப்பட்டுள்ளார்.

'ரேப் றெக்கோடர்' ஒன்றைக் களவாடியதாக கைது செய்யப்பட்ட ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, அதனை மீட்பதற்காக நீர்கொழும்பு கொச்சிக்கடைக்கு நேற்று கொண்டுசெல்லப்பட்டார். [ஈ]

# பலாலி விமான நிலையத்தில் கடத்தல் முறியடிப்பு

(காங்கேசன்துறை, ஞாயிறு)

மலேசியாவிலிருந்து பவுண் வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் பெறுமதி வாய்ந்த வாள் தகடுகளை கடத்தி வந்த நபர் ஒருவர் காங்கேசன்துறை சுங்க இலாகாவினரிடம் மாட்டிக் கொண்டார்.

மலேசியாவிலிருந்து பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்தில் காங்கேசன்துறை சுங்க இலாகாவினர் சோதனையில் ஈடுபட்ட சமயம் மலேசியாவிலிருந்து பவுண் வேலைகளுக்கு உபயோகிக்கும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வாள்தகடுகளை இரு வைகளில் போட்டு கடத்தி வந்த நபர் ஒருவர் அகப்பட்டுக் கொண்டார். மலேசியாவிலிருந்து வந்த இவர் பலாலி விமான நிலையத்தில் தங்கிவிட்டு பின்னர் கொழும்புக்கு புறப்பட இருந்தபோது காங்கேசன்துறை சுங்க இலாகாவினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டார்.

விசாரணையின் பின் மேற்படி வாள்தகடுகள் பறிமுதல் செய்யப்பட்டது மேற்படி நபருக்கு 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. [ஈ]

# சீரகம், மஞ்சள் கடத்தல் முறியடிப்பு

காங்கேசன்துறை, ஞாயிறு

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட மஞ்சள் 5 மூடை, சீரகம் 5 மூடை ஆகியவை லொறி ஒன்றில் ஏற்றப்பட்டு மாதகல் பண்டத்தரிப்பு வீதியால் கொண்டு செல்லப்பட்ட சமயம் காங்கேசன்துறை சுங்க இலாகா அதிகாரி திரு. எம். அருணானந்தமும் மற்றும் சுங்க அதிகாரிகளும் நடாத்திய திடீர் சோதனையின் போது சிக்கிக் கொண்டன.

மேற்படி லொறிச் சாரதியும், லொறிக்கிளினரும் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டதுடன் இக்கடத்தல் பொருட்களுக்கு சொந்தமானவரும் மேற்படி கடத்தல் பொருட்களை ஏற்றிவந்த லொறியின் பின் காரில் வந்து கொண்டிருந்தவருமான நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

விசாரணை முடிவில் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் யாழ். சுங்க கலெக்டர் திரு. எஸ். எம். ஜே. சேனரத்தினவினால் 3500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. [ஈ]

# மின்இணைப்பு வேலைதுரிதம்

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் கிராமத்துக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கான வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. அநேகமாக இரண்டு மாதத்திற்குள் மின்வெளிச்சம் தொல்புரம்பூராகவும் கொடுக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சைவசித்தாந்த வகுப்புகள்

(ஆனைக்கோட்டை, ஞாயிறு)

யாழ். நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் சைவசித்தாந்த வகுப்பு நடாத்தப்பட்டுவருகிறது. இவ்வகுப்பை வித்துவான் கெ. கார்த்திகேசு நடாத்திவருகிறார். (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கெட்டவைகள் செய்வதற்கு எல்லாவிதமான வசதியும் எப்பொழுதும் இருக்கும். ஆனால் நல்லது செய்வதைப் போன்ற இன்பமும் அமைதியும் மட்டும் கிடைப்பதில்லை. — ராஜாஜி

ஈழநாடு

(4-2-74)

# ரயில்—பஸ் கட்டண உயர்வு

ரயில் பஸ் கட்டண உயர்வு இன்று முதல் அமுலாகின்றது. விலைவாசி உயர்வால் பளுவைத் தாங்க முடியாமல் அவதிப்படும் மக்களுக்கு இது பெரும் சோதனைதான். அரசாங்கத்துக்கு இது தெரியாமலிருக்கமுடியாது. ஆனாலும் பஸ் ரயில் கட்டணங்களை உயர்த்தாமல் வேறெந்த வழியிலும் நிலைமையைச் சமாளிக்கமுடியாது என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனா புள்ளிவிபரங்களுடன் தெரிவித்திருக்கிறார். அரசாங்கம் விரும்பாமல் வேறுவழியின்றியே இந்தக் கட்டண உயர்வைச் செய்திருக்கிறதென்பது தெளிவு. எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். பிரேமதாசா ஒரு பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்திருப்பதுபோல் அரசாங்கம் பதவிதுறந்தால் பிரச்னை தீர்ந்துவிடுமா?

எண்ணெய் எரிபொருள் தட்டுப்பாடு நமது நாட்டுக்கு மட்டுமல்லாது உலக நாடுகள் பலவற்றுக்கும் பொதுவான பிரச்னை என்பது தெரிந்ததே. ஆனாலும் எண்ணெய் உற்பத்திசெய்யும் அரபுநாடுகளின் பிரச்னையில் அந்த நாடுகளை வேறெந்த நாடுகளையும்விட நமது நாடு ஆதரித்துவருகிறது. நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் மற்றும் சில நாடுகள் கூட இஸ்ரேலுடனான ராஜீயத் தொடர்புகளைத் துண்டிக்காதிருக்கையில் நமது நாடுதான் அந்த உறவைத் துண்டித்துக்கொண்டதென்பது அரபுநாடுகளுக்குத் தெரியாததல்ல. என்றாலும் பகை நாடுகள் சம்பந்தமாக எடுத்த அதே நடவடிக்கை நட்புநாடான இலங்கையையும் பாதிக்கிறதென்பதை இன்னமும் அரபுநாடுகள் உணர்ந்துகொள்ளாதிருப்பது விந்தையே!

இந்தியாவில் எண்ணெய் வயல்கள் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு எண்ணெய் உற்பத்திசெய்யப்படுகின்றது. இந்த உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், புதிதாக எண்ணெய் வயல்களைக் கண்டுபிடிக்கவும் சோவியத் யூனியனுடன் இந்தியா புதிதாக ஓர் ஒப்பந்தத்தையும் செய்துள்ளது. அமெரிக்காவில் கிடைக்கும் எண்ணெயுடன் இறக்குமதி எண்ணெய் எரிபொருள் இல்லாமலே வேறு எந்தவிதத்தில் தங்கள் தேவையை நிறைவேற்றலாம் என்பது குறித்து ஆராய்ச்சிசெய்து அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது.

இலங்கையைப்பொறுத்தவரையில் இந்த வாய்ப்பும் வசதியும் இல்லையெனினும் இலங்கையில் எண்ணெய்ப் படிவங்களிருப்பதாகப் பலவருடங்களுக்கு முன்னரே சில நிபுணர்கள் தெரிவித்த தகவல்களைக் கொண்டு இப்போதுதான் முதலாவது எண்ணெய்க் கிணறு தோண்டும் பரீட்சார்த்த வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இந்த முயற்சியை முன்னரேயே தொடக்கியிருந்தால் இன்று நமது நாட்டின் எண்ணெய் எரிபொருள் தேவைகளை வெளிநாடுகளிலிருந்து எதிர்பார்க்காமலே சுயதேவைப் பூர்த்தியடையும் வாய்ப்புக் கிடைத்திருக்கலாம்.

பஸ்—ரயில் கட்டண உயர்வை ஆட்சேபிக்கும் திரு. பிரேமதாசா சார்ந்துள்ள ஐக்கியதேசியக் கட்சியும் பஸ்—ரயில் கட்டணங்களைஉயர்த்துவதைத் தவிர வேறுவழியில்லைஎன்று என்று கூறும் இன்றைய ஆட்சிபீடத்தவர்களும் கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் இலங்கையில் எண்ணெய்ப் படிவங்கள் இருக்கின்றனவா என்பதுபற்றி ஏன் ஆராய்ச்சிசெய்யவில்லை?

இந்தியாவில் எண்ணெய்ப் படிவங்கள் இருப்பதாகத் தகவல் கிடைத்ததும் அதுபற்றி ஆராய்வதற்கு இந்திய அரசு முயற்சி மேற்கொண்டபோது பல இடையூறுகள் ஏற்பட்டபோதிலும் இந்திய அரசு தனது முயற்சியைக் கைவிடவில்லை. இந்தியாவில் எண்ணெய்ப்படிவங்களிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு ஆராய்ச்சி நடைபெற்றபோதே இங்கும் எண்ணெய் படிவங்கள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கலாம்.

ஆட்சிபீடத்திலமரும் வாய்ப்பும் பெற்றிருந்த, வாய்ப்புப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த எண்ணெய்ப் படிவங்கள் வடக்கு மாகாணத்திலேயே காணக்கூடியதாகத் தகவல் கிடைத்ததால் அரசியல் மற்றும் வேறு காரணங்களைக் கொண்டே இந்த முயற்சியில் அக்கறை காட்டவில்லையென்று சந்தேகிக்க நியாயமுண்டு.

இனியாவது அரசியல் மற்றும் காரணங்களைக் கொண்டு எதையும் நோக்காது நாட்டின் நலனை மட்டுமே கருத்திற் கொண்டு நமது தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய மூலப்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கும் நமது உழைப்புச் சக்தியையும் மூலப்பொருள்களையும் உபயோகிக்கவும் முன்வர வேண்டும்.

இதேசமயம் இன்றைய எண்ணெய் எரிபொருள் நெருக்கடியைச் சமாளிப்பதற்குப் பொதுமக்களும் வாகனச் சொந்தக்காரர்களும் தம்மால் இயன்றளவு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டியது அவசியமாகும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 61-ம் இலக்கத்தில் [illegible] அச்சகத்தில் 1974-ம் ஆண்டு பெப்ரவரி 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. The ELANADU, P. O. Box No. 49, Jaffna. Telegrams: "[illegible]" [illegible]

# புத்தாண்டே புலர்க

— யாழூர்க் கணக்கன் —

புத்தாண்டு பிறந்தது
புதுவாழ்வு மலரட்டும்
சித்தாவின் கற்பனையில்
உடோப்சமது வளரட்டும்

மன்றுளும் மனிதகுலம்
மாண்போடு சிறக்கட்டும்
என்னாளும் இன்புற்று
இனிதாக வாழட்டும்

கையேந்தி நின்றவர்க்கும்
கதியில்லை யென்றவர்க்கும்
பையேந்தி வந்தவர்க்கும்
பசிதாகந் தீரட்டும்

"தன்கையே தனக்குதவி"
தருமையதாம் பொன்மொழியும்
மன்மாதா மடிமீதில்
மகிமையோ டிலங்கட்டும்.

ஏரைப் பிடித்திடுவோம்
இல்லையெனுங் குறைதீர்ப்போம்
பாரையே காத்திடுவோம்
பற்றுக் குறைதீர்ப்போம்.

மண்ணைப் புரட்டிடுவோம்
மணிகளைப் பெற்றிடுவோம்
தென்னை வளர்த்திடுவோம்
தினைப் பெருக்கிடுவோம்

மலர்ப்பூங்கா மறைந்தொழிய
மரவள்ளி மலிந்துவிடப்
பலர்கையில் பணங்கும்
பண்புகளும் ஓங்கிவிடும்

பெரியவன் நானென்ற
பேதந் தொலைந்துவிடும்
வறியவன் சிந்தையில்
வற்றா மகிழ்வுறையும்.

உழவனுக்கு வழிபிறக்கும்
ஊரையே ஆண்டிடுவான்
இழவோடு இழிநிலையும்
இல்லை தொழியுமன்றோ

வறுமைக்கு முடிவுதரும்
வளம்பெருகி வழியுமன்றோ
சிறுமைக்கும் சிறிதேனும்
சிற்றூரில் இடமுண்டோ.

ஈழம் வளங்கொழிக்கும்
எல்லோரும் இன்புறுவர்
காவலும் கைகூடும்
கண்ணியமும் வளர்ந்துவிடும்.

உழைப்புக்கே நாடுசொந்தம்
உழவுக்கே காடுசொந்தம்
உலகோர்கள் கண்டறிந்த
உயரிய கருத்தாமே.

கூட்டாகப் பண்ணையதைக்
கூடியே செய்திடுவோம்
தோட்டாகப் பணந்திரட்டி
நாட்டையே நடத்திடுவோம்.

அன்னியரை வழிபார்க்கும்
அடிமுட்டாள் தலையறுத்து
வன்னியரைப் போல்வாழ்ந்து
வளம்பெருக வகைசெய்வோம்.

பட்டணத்து வாசியென்று
பகட்டாகப் பேசாமல்
பொட்டணத்தைச் சுமந்து
பொன்வயலை நோக்கிடுவோம்.

மரவள்ளி மாவரைத்து
மணியான தீன்சமைத்து
உரஞ்சேர உண்டிடவே
உடல்ஊறிப் பருத்திடுமே

கஞ்சிக்கு வழியுமில்லை
கவலையுந் தீரவில்லை
எஞ்சியது ஏதுமில்லை
என்றிடுவர் ஏமாளி.

உத்தியோகம் பார்க்கவேண்டும்
உயர்பதவி வேண்டுமென்று
பைத்திய காரனைப்போல்
பதறிப் பிதற்றுதீர்

ஊணில்லை உடையுமில்லை
ஒதுங்கிவாழ வீடுமில்லை
வீணிலுயர் பட்டமதை
வேண்டுமென் றரற்றுதீர்.

பட்டம் பதவிகளும்
பகட்டான கோட்டுக்களும்
மட்ட குணம்படைத்த
மாந்தருக்கே சொந்தமப்பா.

தன்னிறைவு காணவென்றால்
மண்ணைப் புரட்டுமப்பா
பொன்விளையும் பூமியது
பொறுத்திருந்து பாருங்களேன்.

ஏமாற்ற வாழ்வுநம்மை
இனிதாக வந்தடையும்
ஏமாந்த காலமெல்லாம்
இதோடு சென்றடையும்.

கைநீட்டி நின்றநம்மைக்
கைகூப்பி வணங்கிடுவர்
வையகமே வாழ்த்துமப்பா
ஐயுறவோ எங்கருத்தில்.

## ஆனையிறவு—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வர். பின்னர் அங்கு கடமையிலிருக்கும் அதிகாரியின் அங்கீகாரத்துடன் நெல், அரிசி வாகனங்கள் தடையைத் தாண்டி வர அனுமதிக்கப்படும்.

உண்மையான விவசாயிகள் தான் என்பதையும், சொந்த வயல்களில் விளைந்தநெல், அரிசி முதலியவற்றைக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் அவ்வப்பகுதி காரியாதிகாரிகளினால் உறுதி செய்யப்படுபவர்கள் மட்டுமே தொகையாக இவற்றைக் கொண்டுவர அனுமதிக்கப்படுவர். பதுக்கல் வியாபாரிகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துமுகமாக இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காரியாதிகாரியின் 'பர்மிட்' இன்றி நெல், அரிசியைத் தொகையாகக் கொண்டு வருபவர்களிடமிருந்து அவை பறிமுதல் செய்யப்படும்.

ஆனையிறவுத் தடைமுகாமில் 24 மணி நேரமும் தொடர்ச்சியாகக் கடமையாற்றுவதற்கென்று தெரிவு செய்யப்பட்டுள்ள அதிகாரிகளின் விபரங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. நாகலிங்கம். கிளிநொச்சி காணி அதிகாரி திரு. மக்பூல், பரந்தன் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். இராமநாதன், யாழ். நெல்சந்தைப்படுத்தும் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. ரி. சிவலிங்கம், யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. வி. சத்தியநாதன், அபிவிருத்தித் திட்ட அதிகாரி திரு. கே. சண்முகலிங்கம், உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஜே. எஸ். [illegible] [illegible] காரி திரு. கே. பரமேஸ்வரன், யாழ்ப்பாணம் காணி அதிகாரி திரு. கே. ரி. சம்பந்தன், உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பி. நடராஜா, கிளிநொச்சி விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை, உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. கந்தையா, விலைக்கட்டுப்பாட்டு உதவி அதிகாரி திரு. கே. வல்லிபுரம், யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. ஆர். யோகநாதன். கிளிநொச்சி விவசாய இலாகாவைச்சேர்ந்த திரு. ஆர். சோதிநாதன், திரு. ஆர். இராஜேஸ்வரன் ஆகியோர் ஆனையிறவு முகாமில் கடமையாற்றுவர். (ஈ)

நெல்லியடி, ஞாயிறு

நெல்லியடி உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுன்னாகத்திற்கு இடமாற்றம் பெற்றதைத் தொடர்ந்து காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு. தர்மசிறி கரியவாசம் நெல்லியடி உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டராக இடமாற்றப்பட்டுள்ளார்.

## பிரிவுக்குத்தான்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யுகிறார்கள். இதன் மூலம் பிரிவினைக்குத் தூபமிடுகிறவர்கள் அவர்கள்தாம் என்கிறார் திரு. கருணாநிதி.

இப்போதுள்ள அரசியல் திட்டத்தில் மாநிலங்களுக்குப் போதிய அதிகாரம் இல்லையென்று குறிப்பிட்ட தமிழ்நாடு முதல்வர் குடியரசுதின விழாக்களில் தேசியக் கொடியை ஏற்றிவைக்கும் அதிகாரம்கூட மாநில முதல்வர்களுக்கு இல்லையென்றார்.

### அண்ணா நினைவு தினம்

அமரர் அறிஞர் அண்ணாதுரையின் நினைவு தினம் இன்று தமிழ்நாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது. அண்ணா தி. மு. கழகத்தினரும், தி. மு. கழகத்தினரும் அண்ணா நினைவு தினம் அனுஷ்டித்தனர்.

ராஜாஜி மண்டபத்திலிருந்து தி. மு. கழகத்தின் சார்பில் முதல்வர் திரு. மு. கருணாநிதி தலைமையில் தலைவர்களும், அமைச்சர்களும் அண்ணா சமாதிக்கு ஊர்வலமாகச் சென்றனர்.



## குறள் அமுதம்

புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாகா வழவேண்டும். "அப்புகழ்" அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்று இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org